**செய்தி வெளியீடு எண் : 1147** **நாள் : 05.08.2024**

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் – சிப்காட்**
**தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் வசதிக்காக**
**சிப்காட் BIZ BUDDY HELPLINE எண் வசதி (9894322233).**
**மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்**
**முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தகவல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழில் துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கின்ற வகையில் தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்கள் மற்றும் உலக அளவிலான தொழில் முதலீட்டாளர்கள், தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளை தொடங்கிட புதிய முதலீட்டு ஒப்பந்தங்கள் மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் புதிய சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைத்தல், தொழில் முதலீடுகள், நிலம் கையகப்படுத்துதல் பணி முன்னேற்றம் மற்றும் தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்புகள் மேம்படுத்துதல் தொடர்பாக, அனைத்து சிப்காட் தொழிற் பூங்காக்களின் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் இன்று (05.08.2024) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு திட்டமான ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியினை 2030–க்குள் எய்திடும் வகையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது.

தொழில் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் தொழில் தொடங்க வேண்டும் என்றால் தமிழ்நாடு தான் சிறந்தது என்பதை அடையாளப்படுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் தொடங்குவதற்கான முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை தனது கண்காணிப்பில் வைத்துள்ளார். இதற்காக பல்வேறு திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான தகுந்த இடங்களை ஆய்வு செய்ய வேண்டும். தமிழ்நாட்டை தொழில் தொடங்க சிறந்த மாநிலமாக அடையாளப்படுத்துவது அலுவலர்களின் கடமை. சிப்காட் வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக சிப்காட் அமைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், நடைபெறவுள்ள பணிகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சிறப்பாக முடித்து விரைந்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக பணிபுரிய வேண்டும்.

தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் வசதிக்காக சிப்காட் BIZ BUDDY HELPLINE எண் வசதி 9894322233 ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் வேண்டுகோளை ஏற்று மாதந்தோறும் முதல் திங்கள் கிழமை நடத்தப்பட்டு வந்த BIZ BUDDY – கூட்டம் இனி வரும் காலங்களில் மாதந்தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமை நடத்தப்படும் – எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சிப்காட் மேலாண்மை இயக்குநர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., சிப்காட் செயல் இயக்குநர் திருமதி டி.சிநேகா, இ.ஆ.ப., சிப்காட் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu